<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 31/2012 நாள்: 01.04.2026 பி.வா.சா.4 – ஜெயக்குமார்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 2வது பிரதிவாதி ஆனந்த முருகன் எனது தந்தை என்றால் சரிதான். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை எனது தகப்பனார் தான் வழக்கறிஞரிடம் சொன்னார் என்றால் சாட்சி எனது தகப்பனார் சென்னார், எனக்கும் அந்த விவரங்கள் தெரியும். 1வது பிரதிவாதி எனது தந்தையின் உடன்பிறந்த சகோதரர் எனது பெரியப்பா என்றால் சரிதான். 1 முதல் 3 வாதிகள் எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் உள்ள போது 1வது வாதி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவருடைய வாரிசுகள் தான் 4 முதல் 6 வரையுள்ள வாதிகள் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் உள்ள போது 2வது வாதி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவருடைய வாரிசுகள் தான் 9 மற்றும் 10 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

2. நான் இந்த வழக்கில் தனிப்பட்ட முறையில் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நானும், எனது சகோதரர் 5வது பிரதிவாதியும் தமதாக ஏற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். பி.சா.ஆ.31 14.09.2009 தேதியிட்ட உயில் ஆவணமானது காங்கேயம் துரைசாமி என்ற பத்திர எழுத்தர் அலுவலகத்தில் எழுதப்பட்டது என்றால் சரிதான், அதை நான் படித்து பார்த்த பிறகு தெரிந்து கொண்டேன். மேற்படி உயில் ஆவணம் எழுதும் போது நான்,

எனது சகோதரர், எனது தந்தை, சோமசுந்தரம் ஆகியோர்கள் எனது பாட்டியுடன் உடன் இருந்தோம் என்றால் சரியல்ல. 14.09.2009 தேதிக்கு முன்பாக எனது பாட்டி லட்சுமியம்மாளுக்கு புற்று நோய் இருந்தது என்றால் சாட்சி 1990 லேயே புற்றுநோய் இருந்தது. மேற்படி காலகட்டத்தில் மார்பக புற்றுநோயும், 2005 ம் ஆண்டு கர்ப்பபை புற்றுநோயும் இருந்தது என்று சாட்சி கூறுகிறார். 2005 ம் ஆண்டு கர்ப்பபை புற்றுநோயிற்கு எனது பாட்டி லட்சுமியம்மாள் அறுவை சிகிச்சை செய்து கொண்டார் என்றால் சரிதான்.

3. 14.09.2009 தேதியில் எழுதப்பட்ட உயில் ஆவணத்தில் உள்ள வாசகங்கள் எனக்கு தெரியும். மேற்படி உயில் ஆவணம் பற்றி எனது பாட்டி இறந்து 3வது நாள் காரியம் நடந்தபிறகு உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்ட சோமசுந்தரம் சொல்லி எனக்கு தெரியும். எனது பாட்டி லட்சுமியம்மாளுக்கு பிரபு மோட்டார் சர்வீசில் அவருக்குரிய 50 சதவீத பங்கை எனக்கும் எனது சகோதரருக்கும் உயில் மூலம் எழுதி வைத்துள்ளார். மேற்படி உயில் ஆவணம் எழுதுவதற்கு முன்பே மேற்படி பிரபு மோட்டார் சர்வீசில் எனது தகப்பனாருக்கும், 1வது பிரதிவாதிக்கும் தலா 25 சதவீத பங்குள்ளது என்றால் சரிதான்.

4. 14.09.2009 ல் எழுதப்பட்ட உயில் ஆவணத்தில் ஏற்கனவே எனது பாட்டி 05.05.2005 ல் எழுதியுள்ள உயில் ஆவணத்தை ரத்து செய்துள்ளார் என்றால் சரிதான், மேற்படி 05.05.2005 உயில் ஆவணத்தில் என்ன எழுதியுள்ளார் என்றால் எனது பாட்டி லட்சுமியம்மாளுக்கு பிரபு மோட்டார் சர்வீசில் அப்போது இருந்த 10 சதவீதத்தில் எனது தந்தைக்கும், எனது பெரியப்பாவிற்கும் தலா 5 சதவீதம் சேர வேண்டும் என்று உயில் ஆவணம் எழுதியிருந்தார். 01.04.2009 அன்று மேற்படி பிரபு மோட்டார் சர்வீஸ் சம்பந்தமாக எனது பாட்டி மற்றும் அவரது இரு மகன்களுக்கிடையே ஒரு கூட்டுஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கூட்டு ஒப்பந்தப்படி எனது பாட்டி லட்சுமியம்மாளுக்கு 50 சதவீதமும், எனது தந்தை மற்றும் பெரியப்பாவிற்கு தலா

25 சதவீதம் பாகம் உண்டு என்று பங்கிட்டு கொண்டார்கள் என்றால் சரிதான்.

5. 01.04.2009 தேதியிட்ட கூட்டு ஒப்பந்தத்தை நான் படித்து பார்த்தேன். மேற்படி கூட்டு ஒப்பந்தத்தில் வேறு கூட்டு ஒப்பந்ததாரர்களை சேர்க்க வேண்டும் என்றால் மற்ற கூட்டு ஒப்பந்ததாரரின் ஒப்புதல் பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பிரபு மோட்டார் சர்வீசில் நாங்கள் பங்குதாரர்களாக வரவேண்டும் என்றால் 1வது பிரதிவாதியிடம் சம்மதம் பெறவேண்டும் என்றும், அந்த சம்மதத்தை பெற்றுள்ளோமா என்றால் பெறவில்லை, வழக்கு நிலுவையில் இருந்ததால் பெறவில்லை, ஆனால் நிர்வாகத்தில் உள்ளோம். நானும், எனது சகோதரரும் மேற்படி பிரபு மோட்டார் சர்வீசில் பங்குதாரர்களாக சோர்க்கப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் பங்குதாரர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் எனது பாட்டி எழுதி வைத்த பங்கை அனுபவிக்க முடியாது என்றால் சரியல்ல. தற்போது பிரபு மோட்டார் சர்வீசை 1வது பிரதிவாதி தான் பார்த்து வருகிறார் என்றும், நான் நிர்வகித்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும், எனது தகப்பனாரும், எனது சகோதரரும் மேற்படி பிரபு மோட்டார் சர்வீசை நிர்வகிக்கவில்லை, 1வது பிரதிவாதி தான் நிர்வகித்து வருகிறார் என்றால் சரியல்ல.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.01 17:37:25 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.